- 9 MAR 1997


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 26 ஞாயிற்றுக்கிழமை (09-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 102


## மற்றும் ஒரு 'அன்ரனோவ்' பலாலியில் மயிரிழையில் தப்பியது!

### ஒடுபாதைக்கு வெளியே தரையிறக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

விமானப் படைக்குச் சொந்தமான மற்றொரு ''அன்ரனோவ்'' விமானம் நேற்று முன்தினம் பலாலியில் விபத்தில் இருந்து அதிர்ஷ்டவசமாகத் தப்பியுள்ளது.

இரத்மலானை விமானத் தளத்தில் இருந்து பலாலிக்கு படையினரின் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட இந்த விமானம் படையினரையும் சில அதிகாரிகளையும் ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் பலாலி விமானத் தளத்தை நோக்கி வந்து கொண்டி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கஜபாகு அணியைச் சேர்ந்த லெப்டினன்ட் உட்பட பலர் பலி!

### வவுணதீவு தாக்குதல குறித்து தகவல்

கொழும்பு, மார்ச் 9

வவுணதீவு முகாம் தாக்குதலில் கஜபாகு அணியைச் சேர்ந்த லெப்டினன்ட் ஹேமச் சந்திராவும் கொல்லப்பட்டுள்ளார்.

இவருடன் சேர்த்து அந்த முகாமில் இருந்த நன்கு பயிற்சிபெற்ற கஜபாகு றெஜிமென்ட்டைச் சேர்ந்த படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலின் பின்பு தற்பொழுது புதிய துருப்புக்கள் கொண்டு செல்லப்பட்டு அந்த முகாம் மீள அமைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கஜபாகு றெஜிமென்ட் கடந்த 90 ஆம் ஆண்டு மே

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை குறித்த விவரங்கள் ஐ. நா. உயர் அதிகாரி திரட்டுகிறார்!

## எல்சல்வடோர் பிணக்கை கையாண்டு வெற்றிகண்டவர்

கொழும்பு, மார்ச் 9

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான விவரங்களைத் திரட்டுவதில் கொழும்பு வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரியான, - அரசியல் விவகாரப் பணிப்பாளர் பிரான்ஸஸ் வென்ட்ருள் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

எல்சல்வடோர் நாட்டில் நீண்ட காலமாக இடதுசாரிக் கெரில்லாக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நிலவிய பிரச்சினையை, இரு சாராரையும் பேச வைத்து சமாதானத்தை உருவாக்குவதில் வெற்றி கண்டவர் இவர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரப் பணிப்பாளர் இதுவரை ஆளும் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், தமிழ்த் தலைவர்கள், முஸ்லிம் தலைவர்கள் ஆகிய நான்கு தரப்பினருடனும் விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இனப் பிரச்சினைக்கான

(8ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவு முகாம் தாக்குதலில் 84 புலிகள் களப்பலி என தெரிவிப்பு

### சீனக்குடா தாக்குதலில் மூவர்

கொழும்பு, மார்ச் 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வவுணதீவு இராணுவ முகாம் மீது கடந்த வியாழன் அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலில் புலிகள் தரப்பில் 84 பேர் களப் பலியாகி இருப்பதாக புலிகளின் அறிக்கை தெரிவிப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் 200 புலிகள் வரை கொல்லப்பட்டதாகவும் 135 பேர் வரை காயமடைந்ததாகவும் அரசாங்கம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தது.

எனினும் அரசு புலிகளின் இழப்பை மிகைப்படுத்திக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மச்சந்தி முரளி



அப்ப இது தொடர்கதை தான் பாருங்கோ......!

## மாத்தறையில் 2வள்ளங்கள் கடத்தப்பட்டன

மாத்தறை மார்ச் 9

மாத்தறையிலுள்ளகந்தரைப் பகுதியில் சிங்களவர்களுக்குச்சொந்தமான இரு பெரிய மீன்பிடி வள்ளங்களை சுமார் 25 பேர் கொண்ட ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

வள்ளங்களில் இருந்த 8மீனவர்களையும் இறக்கிவிட்டு வள்ளங்களைத் கடத்திச் சென்றவர்கள் தமிழ்மொழியிலேயே பேசினார்கள்என்று தெரிவிக்கப்படுகிறது. (இ- 10

## இலங்கை வருவதற்கு விரும்பிய 3அமெரிக்கருக்கு அனுமதி மறுப்பு

### அமெரிக்க தூதர் கவலை தெரிவிப்பு

கொழும்பு மார்ச் 9

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலின் போது கண்காணிப்புக் குழுவின் இடம்பெற முன்வந்த 3 அமெரிக்கர்களுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது என்று ''தஐலண்ட்'' செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள தேசிய ஜனநாயக நிறுவனத்தின் சார்பில் இலங்கைக்கு வந்து உள்ளூராட்சித் தேர்தலைக் கண்காணிக்க மூவர் முன்வந்தனர்.

அவர்கள் இலங்கை வருவதற்கான அனுமதியை அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதுவர் வழங்கி இருந்தார்.

ஆனால் இலங்கை அரசு இவர்கள் வருவதற்கு அனுமதிக்கவில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம் ஒரு வரலாற்று நிகழ்வு என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 9

''யாழ். தேர்தல் மாவட்ட இணைப்புக்குழுவின் இக்கூட்டத்தை போர் நலிவுகளினால் துன்புற்றிருக்கும் யாழ். மக்களின் விடிவுக்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கூட்டமாக நாம் கருதலாம்.''

— இவ்வாறு யாழ் - கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிகாரிகள் முன்னிலையில் உரையாற்றுகையில் ஈழ ஜனநாயக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

நேற்று யாழ். செயலகத்தில் நடந்த யாழ். [illegible] மாவட்ட இணைப்புக்குழுவின் கூட்டத்துக்குத்தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிவதாசன், [illegible] வேல், எம். [illegible] யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. அரசியல் துறைப் பொறுப்பாளர் கே. வி. கே. ஜெகன், தீவுப்பகுதி ஈ. பி. டி. பி. அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். மனோகரன் ஆகியோரும் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர், பிரதி பிரதம செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள் மாகாணசபை அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர், யாழ். திணைக்களத் தலைவர்கள் பிரதேச செயலர்கள், மக்கள் வங்கி, இலங்கை வங்கி பிரதேச முகாமையாளர்கள் உட்பட பலரும் பங்குபற்றினர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுச் சங்கங்களின் கலந்துரையாடல்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சமாசம், கொத்தணிகள் ஆகியவற்றின் பொதுமுகாமையாளர், தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று 10 - 03 - 97 திங்கட்கிழமை மாலை 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் தவறாது பங்கு பற்றும்படி சங்க நிர்வாகத்தினர் வேண்டப்படுகின்றனர்.

எஸ். கே. சண்முகநாதன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம். (45707)

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட், கோண்டாவில்.

(1998)

G. A. Q. (கலைமுதற்தேர்வு)

Ist in Com. (வர்த்தகமுதற்தேர்வு)

யாழ்., பேராதனை பல்கலைக்கழகம் வெளிவாரி

விரிவுரைகள் ஆரம்பம்:- 14 - 03 - 97 பி. ப, 3.30 மணி
(பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தால் செய்து தரப்படும்.)

★ சிங்கள வகுப்புகள்
புதிய பிரிவு
ஆசிரியர்: திருமதி சுனித்தா
ஆரம்பம்:- 11 - 03 - 97 பி. ப. 4.00 மணி

★ பிரத்தியேக வகுப்புகள்
கணக்கியல்
A/L 98
வங்கி கணக்கிணக்கக் கூற்று
ஆசிரியர்: திரு. பாலவாசன்
ஆரம்பம்:- 11 - 03 - 97 மாலை 4.00 மணி (45706)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு கந்தசாமி

யாழ்ப்பாணம், கந்தர்மடம், அன்னசத்திர வீதியைச் சேர்ந்தவரும் கனடாவில் வசித்து வந்தவருமாகிய சின்னப்பு கந்தசாமி (B. A, ஓய்வு பெற்ற ஆசிரியர்) 2- 3- 97இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாலாம்பிகையின் அன்புக் கணவரும், கனடாவில் வசிக்கும் நாகேஸ்வரன், ஸ்கந்தேஸ்வரன், இந்திராதேவி, சகுந்தலாதேவி, சுந்தரேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைவாணி, சத்தியவதி, நகுலேஸ்வரன், மகேஸ்வரன், உமையாள் ஆகியோரின் அன்பு மாமனாரும் சரவணன், தயாளன், இறமணன், கோபிகா, கார்த்திகா, சிந்துஜா, ஆரூரன், புருசோத்தமன், சஸ்னிதா, கிருஸ்னிதா, ஆகியோரின் அன்புப் பேரனும் கோவிந்தசாமி, இராமசாமி, செல்லம்மா, சரசுவதி ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5- 3- 97 அன்று கனாடவில் நடைபெற்றுள்ளன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
ப. அருள்ராஜசிங்கம்

No: 2. L, BLOCK
பம்பலப்பிட்டி தொடர்மாடி,
கொழும்பு- 4
தொலைபேசி எண்: 591093 (9367)

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிற்றூழியராக தெரிவான 70 பேர்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். போதானா வைத்தியசாலைக்கு சிற்றூழியர்களாக 70 பேர் நியமனம் பெற்றுள்ளனர். இவர்களுக்கான நியமனக்கடிதங்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நியமனம் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

★ செல்வி லோஜினி நடேசன் — கொழும்புத்துறை.
★ செல்வி தவலோசினி சுப்பிரமணியம் — கைதடி.
★ செல்வி அனுசியா அன்னலிங்கம் — ஆனைக்கோட்டை.
★ திருமதி சரோஜா நாகலிங்கம் — கைதடி.
★ செல்வி விஜயகௌரி இராசலிங்கம் — கோண்டாவில்.
★செல்வி பாமினி தர்மகுலசிங்கம் — கொழும்புத்துறை.
★ திருமதி பத்மநாதன் சசிகலா — யாழ்ப்பாணம்.
★ செல்வி லிங்கேஸ்வரி அரசநாயகம் — மானிப்பாய்.
★ செல்வி நிஷாந்தினி சரவணமுத்து — ஆனைக்கோட்டை.
★ செல்வி ரதி மாணிக்கம் — அரியாலை.
★ ஜெயராசா மல்லிகா — கைதடி.
★ மகேந்திரன் தியாகேஸ்வரி — புத்தூர்.
★ மோட்சலிங்கம் சுமதி — சாவகச்சேரி.
★ நல்லசேகரம் பிள்ளை பத்மாசினி — சாவகச்சேரி.
★சிவறஜனி சிவப்பிரகாசம் — நல்லூர்.
★ செல்வி புஸ்பமலர் சுதாகரன் — யாழ்ப்பாணம்.
★ செல்வி நாகநந்தினி தம்பித்துரை — கொழும்புத்துறை.
★ செல்வி அகிலேஸ்வரி கந்தையா — நாயன்மார்கட்டு.
★ அப்புத்துரை சந்திரகுமார் — சுன்னாகம்.
★ கந்தசாமி குணகரன் — ஈச்சமோட்டை.
★ இராமசாமி தயாகரன் — கோண்டாவில்.
அமிர்தநாதன் சுரேந்திரன் — நவாந்துறை.
★ இராஜதுரை அம்பிகைபாலன் — கொட்டடி.
★தம்பையா சவுந்தரராசா சுன்னாகம்.
★ கணபதி சச்சிதானந்தன் — கோண்டாவில்.
★ வைரமுத்து வேலுப்பிள்ளை — கரவெட்டி.
★ தியாகராஜா கிருஷ்ணராஜா — யாழ்ப்பாணம்.
★ சின்னத்தம்பி யோகராசா — வரணி.
★ லெச்சுமணன் சுரேந்திரன் — கைதடி.
★ அரியகுட்டி கமலீஸ்வரன் — கொழும்புத்துறை.
★ சகாதேவன் ஈஸ்வரன் — வண்ணார்பண்ணை.
★ யோகராஜா சிறிதரன் —யாழ்ப்பாணம்.
★ ஜேசுராசா ஜோண்ஸ்ராசா — கந்தர்மடம்.
★ ஜேசுதாசன் நிரஞ்சன் குருநகர்.
★ இரத்தினம் றெஜினோல்ட்தாசன் — நவாந்துறை
★ துரைராசா தவராசா — திருநெல்வேலி.
★ சிவதாசன் சிவகுமார் — அரியாலை.
★ சோமசுந்தரம் மதனதாஸ் — யாழ்ப்பாணம்.
★ சந்தியாப்பிள்ளை ஜோர்ச்கென்றி — குருநகர்.
★ இராமச்சந்திரன் ஜெகராம் — யாழ்ப்பாணம்.
★ கிட்ணன் அன்ரன்றூபதாஸ் — கொழும்புத்துறை.
★ குமாரசுவாமி சரவணபவான் — சாவகச்சேரி.
★ இராசலிங்கம் உதயகுமார் — நாயன்மார்கட்டு.
★ சதாசிவம் சாந்தகுமார் — திருநெல்வேலி.
★ சிவபாலன் சிவராஜன் — யாழ்ப்பாணம்.
★ சிவதாசன்சத்தியகுமார் — அரியாலை.
★ பாலசிங்கம் நந்தகுமார் — கொழும்புத்துறை.
★ பரமானந்தன் சிவகுமார் — யாழ்ப்பாணம்.
★ குணரட்ணம் றமேஸ்— கொழும்புத்துறை.
★ சிங்காரவேல் வடிவேல் — ஆனைக்கோட்டை.
★ ரட்ணசிங்கம் சுந்தரகுமார் — அரியாலை.
★ இராஜரட்ணம் விஜயபாஸ்கர் — யாழ்ப்பாணம்.
★ சங்கரன் சிவலோகநாதன் — யாழ்ப்பாணம்.
★ சந்தணம் ஜெயராஜா — கோப்பாய்.
★ அல்பிரட் கிரேசியன்— ஆனைக்கோட்டை.
★ சிவஞானம் சுகிர்தராஜ் — நல்லூர்.
★ குணரட்ணம் உமாகாந் — சுண்டுக்குளி.
★ றொபின்சன் ஜெயதாஸ் — ஆனைக்கோட்டை.
★ சுந்தரலிங்கம் சாந்தலிங்கம் — கைதடி.
★ மரியதாஸ் ஜோண் பிலிப் — யாழ்ப்பாணம்.
★ செல்வம் சுதிராசா — கோண்டாவில்.
★ செல்வராசா ஜெகபாலன் — கொழும்புத்துறை.
★ கந்தையா சிறீறஞ்சன் — யாழ்ப்பாணம்.
★கந்தசாமி பேரின்பகுமார் — காரைநகர்.
★ பர்ணாந்து அல்பன்அல்வின்ஸ் ஜெயக்குமார் — ஊர்காவற்றுறை.
★ கணபதிப்பிள்ளை விஜயலக்ஷ்மி — நெடுந்தீவு
★ திருமதி லீலாவதி விஜயகுமார் — வேலணை
★ செல்வி ஆரோக்கியநாதர் மேரிகொலொஸ்ரிக்கா — எழுவைதீவு.
★ சுப்பிரமணியம் நித்தியகலா — நயினாதீவு.
★ கனகு லலிதாதேவி — அனலைதீவு. (இ-5)

எமது
புதிய வெளியீடு
★ மின்சாரகனவு
அரவிந்தசாமி,
கஜால், பிரபுதேவா.
★ வேறும் புதிய படங்கள் எம்மிடம்பெற்றுக்கொள்ளவும்.
ரவி ஒளி கானம்
100 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/268)

A/L 98, 99
கிறீஸ்தவம்
Mrs. A.மல்லிகா B. A.
தமிழ்:- மாவை.
செ. நவரத்தினம் M. A.

A/L - Day Class
(Com.)
SHAMROCK
யா/ ஈச்சமோட்டை வீதி.
(45710)

## வைக்கோல் இல்லை

சுழிபுரம், மார்ச் 9

கால்நடைகளுக்குவேண்டிய வைக்கோல் வாங்க முடியாததால் பலர் தமது நல்ல இனமாடுகளை விற்பனை செய்து வருகின்றனர். மழைபெய்யாததால் புல் பூண்டுகளும் முளைக்கவில்லை இதனால் கால்நடை உணவுக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது. (இ-28)

## புதிய வெளியீடுகள்

★ பிறைற்றின் 'வெற்றிக்கனி' (இதழ் - 1-6, இதழ்- 7 - 12 - தொகுப்பாகவும், தனியாகவும்)
★ ஆண்டு 3 முதல் 11 வரையான வகுப்புகளுக்கான பயிற்சிகள் மற்றும் பாடநூல்கள் (சமூகக்கல்வி, விஞ்ஞானம், தமிழ், கணிதம் உட்பட)
★ G. A. Q. மற்றும் A/L மாணவருக்கு (பொருளியல், இந்து நாகரிகம், அரசியல் வினாவிடை, பத்மாவதி சரித்திரம், பாரதியார் கவிதை, கும்பகர்ணன் வதை படலம்)
★ பிறைற்றின் கல்வி மஞ்சரி (O/L பகுதி I, II எல்லாப் பாடங்களும்)
★ கட்டுரை மஞ்சரி (ஆண்டு 4, 5, 9, 10, 11)
★ ஆசிரியருக்கான போட்டிப் பரீட்சை பயிற்சி நூல்
★ நாமும் சுற்றாடலும் செயல் நூல் (ஆண்டு 1, 3, 4)
★ ஆக்கத்திறன் (ஆண்டு 2, 3)
★ சித்திரக் கைநூல், மனைப் பொருளியல்
★ ஆங்கில இலக்கணமும், பேச்சு ஆங்கிலமும்
★ பொது விவேகம் — பொதுஉளச்சார்பு (ஆண்டு 4, 5)
★ வணிகப் புள்ளிவிவரவியல் (பகுதி I)
★ வாழ்க்கைத்திறன் தொழில், தொழில் பயிற்சி (ஆண்டு 7, 8)
★ கு. வி. மற்றும் சுப்பிரமணியம் புத்தகசாலை வெளியீடுகள்
★ இந்திய நாவல்கள் ★ வாழ்த்து மடல்கள்
★ கொப்பி வகைகள், ஸ்ரேசனறி வகைகள்

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:-

★ மக்மிலன் புத்தகசாலை
★ ஸ்ரீகாந்த் புத்தகசாலை
இல. 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(சி/266)

## புலமைப்பரிசில் '97

ஆண்டு 5 மாணவக் குழந்தைகளின் போக்குவரத்து நலன்கருதி எமது பயிற்சிப் பரீட்சைகள் - இக்கல்வி நிறுவனங்களிலும் நடத்தப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| BOND | — யாழ்ப்பாணம் | யூனிவேர்சல் | — கந்தர்மடம் |
| J.E.C. | — ஆனைக்கோட்டை | SCIENCE - ACADEMY | — நல்லூர் |
| RADIANT | — ஆனைக்கோட்டை | அறிவொளி | — நல்லூர் |
| BITSMANS | — மானிப்பாய் | தனஞ்செயன் | — கல்வியங்காடு |
| LUKKY | — கட்டுடை | EXPRESS | — இருபாலை |
| பாரதி | — சித்தன்கேணி | மது | — இருபாலை |
| REMINGTON | — சுழிபுரம் | கோப்பாய் க.நி. | — கோப்பாய் |
| TALENT | — வட்டுக்கோட்டை | IDEAL | — நீர்வேலி |
| குமரன் | — நவாலி | IAS | — ஆவரங்கால் |
| VINYLS | — சுன்னாகம் | LUCKy | — அச்சுவேலி |
| STAR | — சுன்னாகம் | BECON | — உடுப்பிட்டி |
| கலை அரங்கம் | — இணுவில் | CAMBRIDGE | — நவிண்டில் |
| ஈசன் | — கோண்டாவில் | STUDY CIRCLE | — கொற்றாவத்தை |
| SCIENCE CENTRE | — உடுவில் | CRYSTAL | — திக்கம் |
| ஸ்ரீவகி | — கொக்குவில் | சகாபொண்ஸ் | — மாலுசந்தி |
| செல்வி கீதா | — நாச்சிமார் கோயில் | திரு. சற்குணராஜா | — வியாபாரி மூலை |
| வள்ளுவர் | — உரும்பிராய் | Y. M. C. A | — பருத்தித்துறை |
| ரூபி | — உரும்பிராய் | P. E. C. | — புலோலி |
| RADIANT | — அரியாலை | DALTON | — துன்னாலை |
| சரஸ்வதி | — நுணாவில் | துவாரகா | — துன்னாலை |
| வளர்மதி | — மட்டுவில் | | |
| யூப்பிற்றர் | — சாவகச்சேரி | | |
| BRILLIANT INSTITUTE | | | |

BOND INSTITUTES யாழ்ப்பாணம். (45704)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாள நாடாளுமன்றத்தில் புதிய பிரதமர் தெரிவு நாளை

## இடதுசாரிக் குழுக்கள் அரசமைக்க முயற்சி

காட்டும், மார்ச் 9

நேபாளத்தில் புதிய பிரதமர் ஒருவரைத் தெரிவுசெய்ய மன்னர் பிரேந்திரா நாளை திங்கட்கிழமை வரை நாடாளுமன்றத்துக்கு அவாசகம் வழங்கியுள்ளார்.

கடந்த 18 மாதங்களாகப் பதவியில் இருந்த பிரதமர் சேர்பகதூரின் அரசாங்கம் வியாழனன்று நாடாளுமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்றில் தோல்வியடைந்தது. அதனையடுத்து அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்து விட்டார்.

205உறுப்பினர்களைக்கொண்ட நாடாளுமன்றத்தில் 3 கட்சிகள் அங்கம் வகிக்கும் கூட்டணி அரசாங்கம் 101 வாக்குகளையே பெற்றது.

கடைசியாக நடந்த தேர்தலில் தனியொரு கட்சியினால் அரசமைக்க முடியாமற் போய் விட்டதை அடுத்து உறுதியற்ற நாடாளு மன்றமே அங்கு அமைக்கப்பட்டது.

எனினும் நாடாளு மன்றத்தில் உள்ள இடதுசாரிக் குழுக்கள் வலது சாரி தேசிய ஜனநாயகக் கட்சியுடன் சேர்ந்து புதிய அரசை அமைக்கும் நடவடிக்கை எடுத்துவருகின்றன. (ஐ)

# சீனத் தலைநகர் பீஜிங்கில் நடந்த பஸ் குண்டு வெடிப்பில் இருவர்பலி!

## துருக்கிஸ்தான் தீவிரவாதிகள் கைவரிசை

பீஜிங், மார்ச் 9

சீனாவின் தலைநகர் பீஜிங்கின் மத்திய பகுதியில் நேற்று முன்தினம் மாலை வேளை போக்குவரத்து பஸ் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் இருவர் பலியாகினர். சுமார்30 பேர்காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் கடந்த ஒரு மாத காலப்பகுதியில் நடந்த இரண்டாவது பஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் இதுவாகும்.

மறைந்த சீனத் தலைவர் டெங்கின் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டு வந்த வேளையில் கடந்த 26 ஆம் திகதி பெரும்பாலும் முஸ்லிம்களைக் கொண்ட வடமேற்கு ஸின்ஜியாங் பிராந்தியத்தில் பஸ்களில் பல குண்டுகள் வெடித்தன . இதனால் ஐவர் கொல்லப்பட்டனர்.

பிரிவினை கோரி கிளர்ச்சி செய்யும்துருக்கிஸ்தான் தீவிரவாதிகளே இக் குண்டு வெடிப்புச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

ஸின்ஜியாங்கில் உள்ள முஸ்லிம் பிரிவினை வாதிகள் தங்கள் பகுதியை துருக்கிஸ்தான் என்று அழைக்கின்றனர். கடந்த மாதம் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் அங்கு இடம்பெற்ற சீன எதிர்ப்பு கலகங்களில் 9 பேர் கொல்லப்பட்டனர்; 198 பேர் காயமடைந்தனர்.

மத்திய பீஜிங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்பை அடுத்து சீன அதிகாரிகள் நகரில் போக்குவரத்து வாகனங்களின் பாதுகாப்பை அதிசரித்துள்ளனர்.

சீன அரசின் வரலாற்றில் முதன் முறையாக தீவிரவாத ஒழிப்பு பொலீஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சீனாவின் ஸின்ஜியாங் பிராந்தியம் ஆப்கானிஸ்தான், மற்றும் மூன்று மத்திய ஆசிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. (ஐ-5)

# முக்கிய தீவிரவாத தலைவர் காஷ்மீரில் சுட்டுக் கொலை

ஸ்ரீநகர், மார்ச் 9

இந்திய ஆதிக்கத்தின் கீழ் உள்ள காஷ்மீரில் முக்கிய தீவிரவாத இயக்கமான ஹிஸ்புல் முஜாபுதீனின் அதி உயர் தளபதி ஒருவர் உட்பட மூவர் பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

நஸிபுதீன் காஸி எனப்படும் இந்த மூத்த தளபதி ஸ்ரீநகருக்கு தெற்கே காஷ்மீர் பள்ளத்தாக்கில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நஸிபுதீன் காஸியை கைதுசெய்ய இந்தியப் பாதுகாப்பு படைகள் கடந்த பல ஆண்டுகளாக முயற்சி செய்து வந்தன. அவரது மரணம் பிரிவினை வாதிகளுக்கு பெரிய தாக்கமாக அமையும் என்று கருதப்படுகிறது. (ஐ)

★இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானம்:

# வீற்றோவை பாவித்து அமெரிக்கா தடுத்தது

நியூயோர்க், மார்ச் 9

கிழக்கு ஜெருஸலேமில் புதிதாக யூதக்குடியிருப்புகளை அமைக்கும் திட்டத்தைக் கைவிடுமாறு இஸ்ரேலை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றை ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா தனது ''வீற்றோ'' அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்து விட்டது.

இத் தீர்மானத்துக்கு பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய 14 நாடுகளும் ஆதரவாக வாக்களித்தன. ஆனால் பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒன்றான அமெரிக்காவின் பிரதிநிதி பில் ரிச்சார்ட்சன் தனது ''வீற்றோ'' அதிகாரத்தை பயன்படுத்தியதால் தீர்மானம் தோல்வி கண்டது. (ஐ-5)

# பதவியில் இருக்கும் வரை புகை பிடிக்கக் கூடாது!

## ஜப்பானிய பிரதமர் மீது வழக்கு

புகைத்தலை எதிர்த்துவரும் ஜப்பானிய குழு ஒன்று அந்நாட்டு பிரதமர் றுயிற்ராரோ கஷிமோட்டோ மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

பிரதமரது மிகமோசமான புகை பிடிக்கும் வழக்கம் மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு உத்தரவாதம் வழங்குகின்ற ஜப்பானிய அரசமைப்புக்கு எதிரானது என்று அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இந்த வழக்கை நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள ஐவர் கொண்ட குழு பிரதமரிடம் நஷ்டஈடு கோரியுள்ளது. அத்துடன் பதவியில் இருக்கும் வரை அவர் புகை பிடிக்கக் கூடாது என்றும் கோரியுள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக ஜப்பானியப் பிரதமர் இது வரை கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. (ஐ)

# ரஷ்யதுணை பிரதமராக அனற்றோலி நியமனம்

மொஸ்கோ, மார்ச் 9

ரஷ்ய அதிபர் பொறிஸ்யெல்ட்ஸின் தமது தலைமை ஆலோசகர் அனற்றோலி சுபாய்ஸை முதலாம் துணைப் பிரதமராக நியமித்துள்ளார்.

பொருளாதார சீர்திருத்தவாதியான இவரது நியமனத்தால் நாட்டின் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவதில் வேகம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சரவையில் பெரிய மாற்றங்களைச் செய்யப் போவதாக அதிபர் யெல்ட்ஸின் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார். ஆனால், எதிர்பார்க்கப்பட்டது போலன்றி பிரதமர் செர்னோமிடின் தொடர்ந்தும் அப்பதவியில் நீடிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

அனற்றோலி சுபாய்ஸின் நியமனத்துக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சு வரவேற்புத் தெரிவித்துள்ளது. (ஐ-5)

# 100ஆவது நாளை நோக்கி நீடிக்கும் பெரு பணயக் கைதிகள் நாடகம்!

## ஜப்பானிய தூதரக முற்றுகை எப்போது முடிவுக்கு வரும்?

அந்த ராஜீக விருந்துபசாரத்தில் ''விஸ்கி'' அருந்திக் கொண்டிருந்தவர்களில் எவருமே தங்கள் கதி இப்படியாகும் என்பதை கனவிற் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

1996 டிசம்பர் 17 ஆம் திகதி மாலை நேரம். லீமாவில் உள்ள ஜப்பானியத் தூதரின் இல்லம் ஜப்பானிய மன்னரின் பிறந்த தினத்தை ஒட்டிய விருந்துபசாரத்தில் திளைத்துப் போயிருக்கிறது.

அந்தச் சிறிய இல்லத்தின் வரவேற்பு அறையில் சுமார் 400 பேர் — அனைவருமே அதி முக்கிய பிரமுகர்கள் — வி. வி. ஐ பிக்கள்.

**முக்கிய பிரமுகர்கள் கூண்டோடு சிக்கினர்**

பெருவுக்கான ஜப்பானியத் தூதர், மற்றும் சுமார் 18 நாடுகளின் தூதர்கள், தூதரக அதிகாரிகள் பெருவின் வெளிவிவகார அமைச்சர் சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜப்பானிய வர்த்தகப் பிரமுகர்கள், ராஜதந்திரிகள் உயர் பாதுகாப்பு அதிகாரிகள், பெரு ஜனாதிபதியின் உறவினர்கள் எனப் பலர் ஒரே இடத்தில் குழுமி இருக்கின்றனர்.

உயர்ரக குடிபானங்களைத் தட்டுகளில் ஏந்தியவாறு சிப்பந்திகளும் பணியாட்களும் சுறுசுறுப்பாகப் பரிமாறிக் கொண்டிருக்க அடுத்த சில நொடிகளில் அந்த நாடகம் ஆரம்பமாகிறது.

ஜப்பானியத் தூதரக வளாகத்தின் சுவரை துளைத்துக் கொண்டு ''துபக் அமாறு'' (Marta) போராளிகள் சுமார் 20 பேர் தூதரகத்தினுள் நுழைகின்றனர்.

துப்பாக்கி வேட்டுக்களும் கிரனேற் வெடி ஓசையும் விருந்துபசாரத்தில் பெரும் களேபரத்தை உண்டு பண்ண —

ஏற்கனவே தூதரகத்தினுள் விருந்து பரிமாறுபவர்கள் போன்று வேடமிட்டுத் தங்கியிருந்த போராளிகள் கேக் தட்டுக்களில் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களுடன் வெளியே வருகின்றனர். சில நொடிகளுக்குள் விருந்தினர்கள் அனைவருமே துப்பாக்கிகளின் முற்றுகைக்குள் அகப்படுகின்றனர். சில பெண்களும்வயோதிபர்களும் கூக்குரலிட்டனர். குழந்தைகள் பலர் வீரிட்டுக் கத்தினர்.

தப்பி ஓட முற்பட்ட சிலர் மடக்கி வளைக்கப்பட்டனர். அமைதி தவழ்ந்த அந்த இல்லத்துக்குள் வேட்டொலி அங்கும் இங்குமாகக் கேட்டது.

தங்கள் இயக்கத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட வெள்ளை - சிவப்பு நிற துணிகளால் முகத்தை மூடி மறைத்துக் கொண்ட ''அமாறு'' போராளிகளின் கைகளில் நவீன துப்பாக்கிகள் பளபளத்தன.

**உடலில் 15 கிலோ வெடிமருந்து**

போராளிகள் தலைவர் நெஸ்ரர் செபா (Nestor Cerba) உட்பட கெரிலாக்கள் அனைவரது உடலிலும் சுமார் 15 கிலோ வெடிமருந்து நிரப்பப்பட்ட குண்டுகள்; எந்நேரமும் வெடிக்க வைக்கத் தயாரான நிலையில் இருந்தன.

**நல்லூர் தாஸ்**

தூதரக நுழைவாயிலில் மிகப் பயங்கரமான மிதிவெடிகள், பொறிவெடிகள் புதைக்கப்பட்டன; எவருமே உள்ளே நுழைய நினைத்துப் பார்க்கக்கூட முடியாதபடி.

அடுத்த சில நிமிடங்களில் பெருவின் தீவிரவாத எதிர்ப்புப் படையின் விசேட கொமாண்டோக்கள் தூதரக இல்லத்தைச் சூழ்ந்து கொள்ள மிகப் பயங்கரமான மரண பீதி அங்கு குடி கொள்கிறது.

பெருவின் அதிபர் அல்பேர்டோ பிஜிமோறிக்கு (Alberto Fujimori) தகவல் பறக்கிறது. அவர் அதிர்ச்சியில் உறைந்து போகிறார். [illegible] வரை — நூறாவது வெற்றி நாளை நோக்கியுள்ள — இந்தப் பணயக் கைதிகள் விவகாரத்துக்குத் தீர்வு ஒன்றை எட்ட முடியாத நிலையில் அதிபர் பிஜிமோறி தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டி நேரிட்டுள்ளது.

ஜப்பானியப் பிரதமர் தனது அதிர்ச்சியை வெளியிட்டார். தனது நாட்டு பிரஜைகளைக் காப்பாற்றுமாறு பெருவை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

கைதிகளை மீட்க அனைத்து உதவிகளையும் செய்யத் தயார் என்று அமெரிக்க அதிபர் கிளின்ரன் அறிவித்தார். அயல் நாடுகள் பலவும் உதவ முன் வந்தன.

இராணுவ உதவிகளை வழங்கவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

**போராளிகள் விதித்த நிபந்தனைகள்**

பெரு நாட்டு சிறைகளில்

( 5ஆம் பக்கம் பார்க்க)

# பெரு சிறைகளில் வாடும் ''துபக் அமாறு'' போராளிகள்

லீமாவில் உள்ள ஜப்பானியத் தூதரகத்தை தங்கள் முற்றுகைக்குள் வைத்திருக்கும் ''துபக் அமாறு புரட்சிகர இயக்கம்'' (Tupac Amaru Revolutionary Movement) 1983 ஆம் ஆண்டில் கியூபா ஆதரவு ''ரீன் — ஏஜ்'' மாணவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

16 ஆம் நூற்றாண்டில் பெருவில் ஸ்பெயினின் குடியேற்றவாத ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த இந்தியத் தீவிரவாதக் குழுவின் தலைவர் 'அமாறு' வின் பெயரையே இவர்கள் தங்கள் இயக்கத்துக்கும் சூட்டியுள்ளனர்.

பெருவின் வெளிநாட்டு ஆதிக்கம், வெளிநாட்டு முதலீடுகள், அரச பயங்கரவாதம் என்பவற்றுக்கு எதிராகப் போராடிவரும் இந்தக் கடும் போக்கு இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆண், பெண் கைதிகள் பெருவின் பாதாளச் சிறைகளில் வாடுகின்றனர்.

இந்த இயக்கத்தின் தலைவர் நெஸ்ரர் செபாவின் (Nestor Cerba) மனைவியும் அவர்களில் ஒருவர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 ஆவது நாளை....

(மூன்றாம் பக்கத் தொடர்)

வாடும் தங்கள் சகாக்கள் 442 பேரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும்.—

மூன்றாவது நாடு ஒன்றில் தாங்கள் அடைக்கலம் பெற ஒருவழிப்பயண விமான ரிக்கெட்டுக்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் கைதிகளை விடுவிக்க 'அமாறு' போராளிகள் நிபந்தனை விதித்தனர்.

பணய நாடகத்தின் ஆரம்ப நாள்கள், அடுத்து என்ன நடக்கும் என்ற பயங்கரமான நிலையை உண்டு பண்ணின. சமரச முயற்சிகளில் செஞ்சிலுவைச்சங்கம் இறங்கியது ஆனால் யாருமே எதிர்பார்த்திராத வகையில் 'அமாறு' போராளிகள் கைதிகளை அணி அணியாக விடுவிக்கத் தொடங்கினர். பெண்கள், வயோதிபர், என ஆரம்பித்து கடைசியாக ஜப்பானியத் தூதரின் ''எம்மா'' என்ற நாயைக் கூட விடுவித்தனர்.

இன்னமும் முக்கிய பிரமுகர்கள் 72 பேர் மட்டுமே போராளிகளின் பிடியில் எஞ்சியுள்ளனர். அவர்களில் பெருவின் வெளிவிவகார அமைச்சரும் ஒருவர்.

கெரிலாக்களுடன் நேரடிப் பேச்சு என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்று முதலில் கூறிவந்த பெரு அரசு பின்னர் இறங்கி வந்தது. தனது கல்வி அமைச்சர் தாமின்தோ பலர்தோவை போராளிகளுடன் பேச்சு நடத்த அனுப்பி வைத்தார் அதிபர் பிஜிமோறி.

### பேச்சுக்களில் சுமுக நிலை

இந்த விவகாரத்தைக் கவனிக்க சிறப்பு அமைச்சரவைப் பணிப்படை அமைக்கப்பட்டது. போராளிகளின் நிபந்தனைப்படி பாப்பரசரின் வத்திக்கான் பிரதிநிதி, செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுப் பிரதிநிதி உட்பட பல வெளிநாட்டு மத்தியஸ்தர்களும் பேச்சு நடத்தும் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

போராளிகள் குழுவின் தலைவரே தூதரக இல்லத்துக்கு வெளியே வந்து பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளும் அளவுக்கு நிலைமை சுமுகமாகியது.

ஆனால் ஏழு தடவைகளுக்கு மேல் பேச்சுக்கள் நடைபெற்றுள்ள போதிலும் இன்னமும் தீர்வு ஒன்றும் எட்டப்படாமலே யேநிலைமை நீடிக்கிறது.

போராளிகளுக்கு வெளிநாட்டில் அடைக்கலம் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் அதிபர் பிஜிமோறி தீவிரமாக ஈடுபட்டார். அமெரிக்கா, கியூபா உட்பட பல நாடுகளுக்குச் சென்று திரும்பினார். ஆனால் சமரச முயற்சிகளின் பெறுபேறுகள் குறித்து ''நீண்ட மௌனமே' நிலவுகிறது.

இப்போது வெளிநாட்டு அடைக்கலம் என்ற தமது கோரிக்கையைக் கைவிட்டு பெருவிலேயே தங்கியிருக்க தாங்கள் விரும்புவதாகப் போராளிகள் அறிவித்துள்ளனர்.

ஆயுள் தண்டனை பெற்று லீமா சிறையில் நீண்டகாலமாக வாடிவரும் தங்களின் முக்கிய பிரமுகரான லோறி பேர்சன்ஸ் என்ற பெண் போராளியின் விடுதலையை அவர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

### இராணுவ முஸ்தீபு

சமரச முயற்சிகள் ஒருபுறம் நடக்க மறுபுறத்தில் அதிரடி நடவடிக்கை ஒன்றின் மூலம் தூதரக முற்றுகையை முறியடிக்கும் திட்டம் ஒன்றை அமெரிக்க ஆதரவுடன் செயற்படுத்தப் பெரு அரசு முடிவு செய்யக் கூடும் என சிலர் சந்தேகிக்கின்றனர். இவ்வாறான திட்டம் ஒன்று ஏற்கனவே தயார் நிலையில் உள்ளது.

தற்போது எமது பிடியில் இருப்பவர்கள் அப்பாவிமக்களுக்கு எதிரான பெரு அரசின பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்தவர்கள். எனவே அவர்களின் உயிர் பற்றி எமக்கு அக்கறை இல்லை என்று 'அமாறு' போராளிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த விவகாரத்துக்கு இராணுவத் தீர்வு எத்தகைய பாரதூரமான விளைவைத் தரும் என்பதை சகலரும் அறிவர்.

### பிரசார ரீதியில் பெரு வெற்றி

''நாங்கள் பொறுமையாகக் காத்திருக்கிறோம்; 500 ஆண்டுகளாக பல்வேறு அடிமைத் தனங்களை பெரு நாட்டு மக்கள் சகித்து வந்துள்ளனர். அதுபோல நாங்களும் பொறுத்திருக்கிறோம்'' என்று கூறும் ''அமாறு'' போராளிகள்—

பெருவின் ஏழை மக்கள் படும் துன்பங்களையும், அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளையும் உலகின் கவனத்துக்குக் கொண்டு வருவதில் தாங்கள் வெற்றி பெற்றுவிட்டதாகப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

இவை ஒருபுறமிருக்க போராளிகளின் பிடியில் எஞ்சியுள்ள 72 பணயக்கைதிகளும் தங்கள் விடுதலையை எதிர்பார்த்து நாள்களை எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதி பிஜிமோறியின் சகோதரர் உட்பட அவர்கள் அனைவருமே ஆரம்பத்தில் மிகவும் நொந்து போய் இருந்தனர். பயமும், பீதியும் நோய்களும் அவர்களை வாட்டின.

ஆனால் அந்தச் சிறிய இல்லமும் ''ரீன்-ஏஜ்'' கெரிலாக்களது நவீன துப்பாக்கிகளும் இப்போது அவர்களுக்கு நன்கு பரிச்சயமாகிப் போய்விட்டன.

லத்தீன் அமெரிக்காவின் பழையகால கிராமியப் பாடல்களைப் போராளிகளுடன் சேர்ந்து அவர்களும் பாடும் ஒலி தூதரக இல்லத்தில் இருந்து மெல்ல வெளியே கேட்கிறது.

### விட்டுக்கொடாத நிலை

எட்டு சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்த பிறகும் தீர்வு ஒன்றை எட்டுவது தடைப்பட்டிருப்பதாலும்—

வெளிநாட்டில் தஞ்சம் பெறும் நிபந்தனையை போராளிகள் கைவிட்டு விட்டதாலும் நாம் ''எல்லாம் அடங்கிய'' தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம் என்று அதிபர் பிஜிமோறி தெரிவித்திருக்கிறார்.

நாம் எமது தந்தையர் நாட்டிலேயே (Father Land) தங்கியிருக்கவும் எமது மக்கள் பக்கம் போராடவும் முடிவு செய்திருக்கிறோம் எனறு போராளிகள் குழுவின் தலைவர் செபா தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தில் இரு தரப்புமே விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை என்பதையே இக்கூற்றுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தீர்வு ஒன்றை எட்டுவதில் தாமதமாகிவரும் ஒவ்வொரு நாள்களும் இந்த விவகாரத்தை லத்தீன் அமெரிக்க நாடுகளில் இடம்பெற்ற 'மிக நீண்ட பணயக்கைதிகள் நாடகம்' என்ற சாதனையை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கின்றன.

### ஈரானில் நடந்தது

உலகில் மிக நீண்ட பணயக் கைதிகள் நாடகம் 1970 களின் பிற்பகுதியில் ஈரானில் நடந்தது.

அயெத்துல்லா கொமேய்னி தலைமையிலான கிளர்ச்சிப் படை மன்னர் ஷாவின் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் ஈரானிய மக்கள் அரசின் ஆதரவுடன் அங்குள்ள அமெரிக்கத் தூதரகத்தை முற்றுகையிட்டு அங்கிருந்த அதிகாரிகளை பணயக் கைதிகளாக்கினர்.

சுமார் ஒரு வருட காலம் நீடித்த இந்தப் பணய நாடகமே உலகின் மிக நீண்ட பணயக் கைதிகள் விவகாரமாக இருந்து வருகிறது.

இந்தப் பணய நாடகமே அப்போதைய அமெரிக்க அதிபர் ஜிம்மி காட்டரின் தோல்விக்கும் வழிவகுத்தது. ★

## டிராக்டர் பெட்டி விழுந்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

கழிவுப் பொருள்கள் ஏற்றப்பட்ட டிராக்டரின் பெட்டியில் இருந்து கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்ட சமயம் அப்பெட்டி வீழ்ந்ததால் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

தொண்டமனாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றது,

இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறை நகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளியும், பொலிகண்டியைச் சேர்ந்தவருமான அழகுமலை ஜெகநாதன் (வயது 38) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப் பட்டார். (இ·15)

## விளையாட்டுப் போட்டிகள்

குருநகர், மார்ச் 9

யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி முதல் அதிபர் க. இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை கலந்து கொள்வார். (ஐ·51)

★ ★ ★

புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் நா சிவஞானம் தலைமையில் நடைபெறும். (ஐ)

## பரோபகாரமணி விருது

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், காரைநகரைச் சேர்ந்தவரும், இலங்கைச் சுங்கத் திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளருமாகிய அருள்நெறித் தொண்டர் திரு. கே. கே. சுப்பிரமணியத்துக்குப் 'பரோபகார மணி' என்ற விருதை வழங்கிக் கௌரவித்துள்ளார்

காஞ்சிப் பீடத்திலிருந்து இத்தகைய ஒருவிருதை முதன் முதலாகப் பெற்ற வெளிநாட்டவர் திரு. சுப்பிரமணியமே என்பது குறிப்பிடத் தக்கது. இவ் வருடம் பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி தை மாதக் கிருஷ்ண தசமியன்று இச்சிறப்புக்குரிய இவ்விருது வழங்கப்பட்டது.

## மக்கள் முகம்

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்திலும், மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலயத்திலும் மிகுந்த ஈடுபாடுள்ள இவர் அவ்வாலயங்களுக்குப் பெருந் தொண்டுகள் செய்து வருகிறார்.

கொழும்பு காரை அபிவிருத்திச் சபையின் பொதுச் செயலாளராகவும், அகில இலங்கை இந்து மா மன்றம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை ஆகியவற்றின் துணைச் செயலாளராகவும் இருந்து பெருந்தொண்டுகள் செய்த இவர் கொழும்பிலுள்ள ஈழத்துத் திருநெறிய தமிழ் மன்றத்தின் முதற்செயலாளருமாவார்.

சுங்கத்திணைக்கள இந்து ஊழியர் சங்கம் உருவாகுவதற்கு மூலகாரணராக இருந்த பெருமை இவரையே சாரும். ★

# தீவுப்பகுதி சேவைக்கு விரைவில் "தேவரதம்"

## டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு

தீவுப்பகுதி போக்குவரத்தைச் சீர் செய்யும் வகையில் ''தேவரதம்'' என்னும் படகு ஒன்று விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றது.

ஈ. பி. டி. பி செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம். பியுமான திரு. டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இந்தப் படகு சேவையில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக ஈ. பி. டி. பியின் தீவுப்பகுதி அரசியல் நடவடிக்கைக்கு பொறுப்பான திரு. என் மனோகரன் தெரிவித்தார்.

அனலைதீவு, எழுவைதீவுப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமது தீவுப் பகுதி அலுவலகம் பழைய இலங்கை வங்கிக்கு அருகில் இயங்கும் என்றும் அவர்தெரிவித்தார். (ஐ-3)

# ஜீவசேவையே சிவபூசை என்பதை வாழ்ந்து காட்டிய விவேகானந்தர்

## உருவப்பட திரைநீக்கநிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 9

வெறும் சமயம், சமயச்சடங்குகள் என்பவற்றால் ஒருவித பயனும் கிட்டுவதில்லை; சமயம் கூறும் உண்மைகளை மக்கள் தங்கள் வாழ்க்கை நெறியாகக் கொள்ளும் போதே உண்மையான பயன் கிட்டும்,

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கடந்த 3 ஆம் திகதி சுவாமி விவேகானந்தரின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உலகில் தன்னிகரில்லாத இந்து மத துறவியாக சுவாமி விவேகானந்தர் விளங்குகிறார். இந்த யுகத்தில் ஜீவ சேவையே உண்மையான சிவ பூசை என்பதை அவர் தமது வாழ்வின் மூலம் நடைமுறைப்படுத்திக் காட்டியுள்ளார் — என்று தமது உரையில் சுவாமி சித்ரூபானந்தா மேலும் குறிப்பிட்டார்.

அதிபர் திருமதி வ. பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த உருவப் படத் திரை நீக்க வைபவத்தில் பாடசாலை மாணவிகள் 10 பேருக்கு பால்மா பைக்கற்றுக்கள் அன்பளிப்பாக வழங்கப் பட்டன. (ஐ)

## சுட்டுக் கொலை

மும்பாய், மார்ச் 9

இந்தியாவின் பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் முக்கேஷ் துக்கல் நேற்று முன்தினம் இரவு மும்பாயில் அவரது அலுவலகத்துக்கு அருகே வைத்து இனந் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டார். (ஐ)


# அறிவித்தல்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

**அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

காலம்: **1997-3-15 ஆம் திகதி சனிக்கிழமை**

நேரம்: **மு. ப. 11-00 மணி**

இடம்: அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயம்

தலைமை: திரு. க. ஜெகசோதி (சங்க உபதலைவர்)

### நிகழ்ச்சி நிரல்

1. இறைவணக்கம்
2. கூட்ட அறிவித்தல் வாசித்தல்
3. தலைமை உரை
4. சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
5. பிரதமவிருந்தினர் திரு. கா. பரநிருபசிங்கம் - கூ. அ. உ. ஆணையாளர் உரை
6. சிறப்பு விருந்தினர் உரை
7. 1995, 1996 ஆம் ஆண்டுகளில் சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு விவரம் சமர்ப்பித்தல்
8. வன்னிபெருநிலப்பரப்பிற்கு அனுப்பப்பட்ட சொத்துக்களின் விவரம் சமர்ப்பித்தல்
9. 1995/96 ஆம் ஆண்டுகளில் அங்கத்தவர் கொடுப்பனவுகளின் விவரம் சமர்ப்பித்தல்
10. செலவுகள் அங்கீகாரம்
11. 1997/98 நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் அங்கீகரித்தல்
12. புதிய அங்கத்தவரை அங்கீகரித்தல்
13. இரும்புப்பெட்டி கொள்வனவு செய்வது பற்றி ஆராய்தல்
14. எமிலிபோ மீற்றர் கொள்வனவு செய்வது பற்றி ஆராய்தல்
15. உற்பத்தி நிலைய காணிவிடயம் பற்றி ஆராய்தல்
16. நெறியாளர்குழுவில் இளைப்பாற வேண்டியவர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்
17. நெறியாளர் குழுவிற்கு ஒத்துத்தேர்ந்தெடுந்தவர்களை ஆராய்ந்து அங்கீகரித்தல்
18. யாழ். மாவட்டத்திற்கு வெளியே இடம்பெயர்ந்த நெறியாளர் குழு உறுப்பினர்கள் நிலைபற்றி ஆராய்ந்து அவர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்களை தெரிவது பற்றி ஆராய்தல்
19. நன்றியுரை

பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் இக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு அழைக்கின்றோம்.

க. ஜெகசோதி — உப தலைவர்

க. குணசேகரம் — செயலாளர்

(சி-264)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### லயன்ஸ் கழக ஏற்பாட்டில்

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவியருக்கு கண்பரிசோதனை

உடுப்பிட்டி மகளிர்கல்லூரியைச் சேர்ந்த 43மாணவிகளுக்கு வெள்ளியன்று யாழ். ஆஸ்பத்திரியில் கண்பரிசோதனை நடத்தப்பட்டது.

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கான செலவுகளை லயன்ஸ் கழகமே பொறுப்பேற்றுக்கொண்டது.

ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டதற்கமைய வடமராட்சிப் பிரிவு லயன்ஸ் கழகத்தலைவர் லயன் தணிகாசலம் பாடசாலை மாணவிகளை இரு ஆசிரியர்களின் உதவியுடன் அழைத்து வந்திருந்தார். (இ-15)

## உடற்பயிற்சி போட்டிகள்

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (ஐ-4)

## கூட்டம்

கோப்பாய் வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் தரும பரிபாலன சபை வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோயில் முன் மண்டபத்தில் நடைபெறும்.

# மனித நேயச்சட்டம் குறித்து படையினருக்குக் கருத்தரங்கு

### செஞ்சிலுவைக் குழு நடத்துகிறது

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் அனுசரணையுடன் முதன் முறையாக படையினருக்கான மனித நேயச்சட்டம் என்ற தலைப்பிலான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று சென்ற செவ்வாய்க்கிழமை பனாகொடை இராணுவ முகாம் முதலாம் தலைமைப் பணியகத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பல்வேறு முகாம்களைச் சேர்ந்த 25 இராணுவ உத்தியோகத்தர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

மனித நேயச் சட்டம் தொடர்பாக தெற்காசிய நாடுகளில் பல்வேறு கருத்தரங்குகளை நடத்திய கேர்ணல் டேவிட் ரொபர்ட் என்பவர் இந்த பயிற்சிக் கருத்தரங்கை நெறிப்படுத்தினார். (இ-4)


## சரவணபவான் சிற்பாலயம்

ஐம்பொன் விக்கிரகங்கள், திருவாசிகள், கருங்கல் விக்கிரகங்கள், கொடிமரம், கலசங்கள், பீடத் தகடுகள், மற்றும் சகல விதமான கோயில் வார்ப்பு வேலைகள் யாவற்றுக்கும் சரவணபவான் சிற்பாலயத்தை நாடுங்கள்.

சரவணபவான் ஆச்சாரி,
சிற்பாலயம்,
34, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(45597)



# BASF

## யாழ். விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி!

ஜேர்மனியின் BASF நிறுவனத்தின் விவசாய இரசாயனங்களான

குமுலுஸ் டி எவ்
பேர்Fவெக்தியோன்
தயோடான்
பிFன்பொஸ்
பொலிராம்

மற்றும் புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த

டெஸிஸ்

தற்பொழுது கொழும்பிலிருந்து புதிதாக தருவிக்கப்பட்டு குடாநாட்டின் சகல விவசாய இரசாயன விற்பனை நிலையங்களிலும் விற்பனையாகின்றன.

விநியோகஸ்தர்:

## FARMERS STORES

(கமக்காரர் மாளிகை)

சுன்னாகம் கிளை: திருநெல்வேலி

**BASF - FINLAY (PVT.) LTD.**
186, VAUXHALL STREET, COLOMBO - 2

பீடை கொல்லிகள் அபாயகரமானவை, அவதானமாகப் பாவியுங்கள். (சி-255)


## 45 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு: 16 – 11 – 1932

உதிர்வு: 24 – 01 – 1997

எங்கள் அன்புத் தெய்வம்

### திருமதி கமலாம்பிகை நாகமித்திரன்

உன்னையே உருக்கிவாட்டி, உதிரத்தை உணவாயூட்டி,
பாசமும் பரிவும் காட்டி, பாரில் எம்வாழ்வின் இனிமை கூட்டி,
நேசக்கரத்தை நிதமும் நீட்டிய பேரனின் அருமைப் பாட்டி
ஈசன் கழல் இணைந்த எம்தாயே! போற்றி போற்றி.

என்றென்றும் தங்கள் நினைவைச் சுமக்கும்:

**அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்,
உறவினர், நண்பர்கள்.**

'SRI RAAM' – 'ஸ்ரீராம்'
கோப்பாய் வீதி,
உரும்பிராய். (9356)

## நினைவலைகள்

10 ஆம் ஆண்டு — 31 ஆம் நாள்



அமரர்
### வல்லிபுரம் இராமநாதன்

தோற்றம்: 04–05–1919 மறைவு: 13–02–1987

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து எமக்கு வழிகாட்டியாக இருந்த எம் அன்புத் தந்தை மறைந்து வருடங்கள் பத்தாகியும் உங்கள் நினைவுகள் நெஞ்சங்களை ஈர்க்கிறதே!



திருமதி
### இராமநாதன் இராசமணி

தோற்றம்: 07–07–1922 மறைவு: 07–02–1997

எம் ஆருயிர்த் தெய்வமே! பாசத்துடனும், பண்புடனும் எம்மைக் காத்த குல விளக்கே! எமது நெஞ்சங்களில் எப்பொழுதும் நிலைத்து வாழும் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறோம்.

உங்கள் பிரிவின் துயரால் வாடும்:

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தம்பையா வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய். [45701]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 – 11 – 1927

மறைவு: 02 – 03 – 1995

### திருமதி பூமணி நல்லையா

**திதி: மாசி பூர்வ பக்க பிரதமை 9 - 3 - 97**

அன்பான அம்மாவே! ஆருயிர்த் தெய்வமே!
அன்புப் பிணைப்பால் எம்மைப் பெற்று வளர்த்து
பாதியில் எங்களைப் பிரிந்த உங்களின்
ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

**புலேந்திரன் வைகுந்தன்** (பேரன்)

91, மூர்த்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (45600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பலவர்ண துணிகளுடைய, சொக்கட்டான் தகரப்பந்தலும், (40 அடி) அழகிய காட்சிகளுடைய தட்டிகளும், தூண்களும், மணவறையுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சீலன், பிள்ளையார் கோயிலடி, நெட்டிலிப்பாய், கோண்டாவில்.
[45611]

சாவகச்சேரி புகையிரத நிலைய ஒழுங்கையில், கட்டடத்துடன் அமைந்துள்ள $3\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பொ. ச. ஞானசீலன், புகையிரத நிலைய ஒழுங்கை, சாவகச்சேரி.
[சி/225]

குளிர்சாதனப் பெட்டிகள், ஜெனரேற்றர்கள், ஐஸ்கிறீம் தயாரிக்கும் மெஷின், ஐஸ்கிறீம் விநியோக வான் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- லிங்கம் கூல்பார், 75/17, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
(45697)

எம்மிடம் 8'x12'' அளவுடைய சுருக்கு கேற், தேக்கு அலுமாரிகள், ராஸ்மன் செற் (பிறிக்கேஸ் செற்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வரணி பார்மசி, தட்டா தெரு, யாழ்ப்பாணம்.
(45692)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் (புறொயிலர்) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 141, கோயில்வீதி, யாழ்ப்பாணம்.
(45696)

### கோழிக்குஞ்சு

வளர்ந்த பிறீமா பேட்டுக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. R. S. K கோழிப்பண்ணை, முருகபதி, உடுவில், சுன்னாகம். (மான்ஸ் பாடசாலை வீதி)
(45688)

### விண்ணப்பப் படிவம்

ஆசிரியர் கல்விக் கல்லூரிக்கான அனுமதிப்படிவம் விற்பனையாகிறது. சுய விலாசம் எழுதிய நீண்ட தபால் உறையும், ரூபா 6/- பெறுமதியான முத்திரையும் அனுப்பவும். தபாலில் அனுப்பி வைக்கப்படும். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.
(45689)

### தவறிவிட்டது

திரு. சாந்தகுமார் என்பவரின் 633164096 V இலக்க தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் கொழும்புத் துறையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வி. சுகுமார், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரிக்கு அனுப்பி வைக்கவும்.
(9363)

### காணி விற்பனைக்கு

சுன்னாகம் எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக செல்லாச்சி அம்மையார் வீதி- கே. கே. எஸ் வீதிக்கு உட்பட்ட ஆறேமுக்கால் பரப்புக்காணி கிணற்றுடனும், கட்டடங்களுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சு. ஸ்ரீ பாஸ்கரன், 7 ஆம் கட்டை ஒழுங்கை, மல்லாகம்.
(45695)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், வயது 29, கேட்டை, செவ்வாய்க் குற்றமற்ற ஆசிரியைக்கு இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியாவில், உத்தியோக மணமகன் தேவை. ''சேவை நம்பகம்'' விவாகசேவை, வைமன் வீதி, நல்லூர்.
(45694)

### ஆங்கிலம், கணிதம்

ஆண்டு 11, 10, 9, O/Lஇல் ஒரேதரத்தில் Distinction Credit பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். ஆசிரியர், இல. 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.
(9366)

## பரமஹம்சர் ஜெயந்தி விழா

ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சரின் 162 ஆவது ஜெயந்திவிழா திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நாளை திங்கட்கிழமை காலையும் மாலையும் நடைபெறவுள்ளது.

காலை நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணிக்கும், மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 3.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

உ

## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

நிகழும் மங்களகரமான தாது வருடம்
மாசித் திங்கள் 26 ஆம் நாள் இன்று (09-03-1997)
ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் வரையுள்ள
(சித்தாமிர்த - மேடலக்கின) சுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**திவாஹரி (ஜெனி) அவர்கட்கு**

பூப்புனித நீராட்டு விழா நடத்த இறையருள் கைகூடியமையால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்:
**ஐயம்பிள்ளை முருகையா - புஸ்பமலர்**
(ஸ்ரீலங்காரெலிகொம், யாழ்ப்பாணம்)

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

முன்னைய விலாசம்
சூராவத்தை,
சுன்னாகம்.
(45659)

## கல்விச் சேவை நலம் பாராட்டு

## திருமதி மல்லிமலர் யோசேப்

39 ஆண்டுகள் மாணவ சமுதாயத்திற்காக
உழைத்து 1997 - 03 - 01 இல் ஓய்வு பெற்ற
**திருமதி மல்லிமலர் யோசேப்**
அவர்களின் சேவையை நினைவுகூர்ந்து
பாராட்டுகிறோம்.
அன்னார் நலம்பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்.
இறையருள் கைகூடுவதாக.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பெற்றோர், பழையமாணவர்.

யா/ எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாலயம்,
எழுதுமட்டுவாழ்.
(சி-263)

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 20 — 06 — 1960



உதிர்வு: 21 — 02 — 1993

திருமதி
**சுகுணாதேவி பாலச்சந்திரன் B. A.**
(முன்னாள் ஆசிரியை)

**திதி: 09 - 03 - 1997**

ஆறிடுமோ உன் நினைவுகள்
ஆண்டுகள் நான்கு சென்றிடினும்
பாரினில் வந்துதித்து பட்டதாரியாகி
பாதியில் எம்மை பரிதவிக்கச் செய்ததேனோ?
ஈன்ற மகவின் ஆசைமொழி கேட்கு முன்பே
வான்வழி தேடியது முறையாகுமோ? - சுகுணா
உன் எழில் உருவம் மறைந்தாலும்
எம் நினைவுகளில் என்றும் வாழ்வாயம்மா.

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பு மகன்: கௌசிகன்,
பெறாமக்கள்: துளசி, சுமங்களா,
பிரேமளா ஆகியோருடன் அம்மா,
அண்ணமார், அக்காமார், மருமக்கள்.

கைலாயபிள்ளை வீதி,
கச்சாய் றோட்,
சாவகச்சேரி.
(சி/240)

உ
சிவமயம்
இலங்கை இந்துமத பீடாதிபதி சிவாச்சார்ய செம்மல்,
அருள்ஜோதி, சிவாகமஞானி
கலாநிதி சிவப்பிரம்மஸ்ரீ
**ஸ்கந்த - சாம்பசிவ சிவாச்சார்யார்**
**( D. A. M., M. I. H., M. D. H. )**
அவர்கள் அமரத்துவம் அடைந்தமை குறித்த
## 31 ஆம் நாள்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலிப் பேருரையும்

இடம் : இலுப்பைத்தாழ் முருகன் தேவஸ்தானம்
சங்கானை.
காலம் : இன்று ஞாயிறு (9-3-97) காலை 10 மணி.

உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சிவஸ்ரீ. சி. நித்தியானந்தக் குருக்கள் குடும்பத்தினர்.
சங்கானை.
(45698)

## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்
## வருடாந்தப் பொதுக் கூட்டம்

**இடம்:-** கல்லூரி மண்டபம் (மருதனார்மடம்)
**காலம்:-** 19-04-1997 சனிக்கிழமை மு.ப. 9,30 மணி.

அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். சந்தாப்பணம் செலுத்தாதவர்கள் சந்தாவைச் செலுத்தி தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும். ஆயுட்கால அங்கத்தவர்கள் தங்கள் தற்காலிக வதிவிட முகவரியைச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

அங்கத்தவர் பட்டியலைக் கல்லூரி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

க. நாகராசா (அதிபர்)
**தலைவர்**

செ. சத்தியமூர்த்தி (ஆசிரியர்)
க. முத்துலிங்கம் (ஆசிரியர்)
**இணைச் செயலாளர்கள்**

(சி/265)

பண்டத்தரிப்பு
## பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
**(மட்டுப்படுத்தப்பட்டது)**
சங்கப் பொதுச்சபை பிரதிநிதிகளுக்கு
## 16 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்
**06-04-1997**

மேற்படிசங்கத்தில்16ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 1997-04-06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு (புதிய நேரம்) சங்கத் தலைவர் திரு. ச. செல்வரத்தினம் அவர்கள் தலைமையில் சங்கக் காரியாலய கூட்ட மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது என்பதை சங்கப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

சங்க உபவிதி 43 இன் பிரகாரம் மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏதாவது பிரேரணைகள் பிரேரிக்க விரும்பும் பொதுச் சபைப் பிரதிநிதிகள் அப்பிரேரணையின் பிரதிஒன்றை 1997-03-19 ஆம் திகதிக்கு முன்னர் சங்கப் பொதுச் செயலாளருக்கு கிடைக்கக் கூடியதாக எழுத்து மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் பிரேரணைகள் வருடாந்தப் பொதுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம் பெறமாட்டாது என்பதனையும் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதிநிதிகளுக்கு தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர்கள் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ச. செல்வரத்தினம்
தலைவர்

ஆ. நாகராசா
செயலாளர்

**பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்**
பிரதான வீதி, பண்டத்திரிப்பு.
09-03-1997.

குறிப்பு:- பொதுச்சபைப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளுவதற்கு வசதியாக தங்களின் தற்போதைய முகவரியை சங்கத்தில் இதுவரை பதிவு செய்யாதவர்கள் எமது சங்கக் கிளை முகாமையாளர் மூலமோ அல்லது நேரடியாகவோ தங்கள் முகவரியைச் சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.
(சி/248)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சமூக நாசம்

பகல் பொழுதை ஒருவாறு அன்றாட அலுவல்களுடன் போக்கினாலும், இரவில் அமைதியாக ஆழ்ந்து உறங்குவோர் எண்ணிக்கை இப்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகக் குறைவு எனலாம்.

இதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்தது தான். இரவு நேர ஊரடங்கு அமுலில் உள்ளதால் சோதனை, தேடுதல் என்ற பெயரில் எந்நேரமும் படையினர் தமது வீட்டுக்கோ, ஒழுங்கைக்கோ வரக்கூடும் என்ற அச்ச உணர்வுடனேயே மக்கள் படுக்கைக்குச் செல்கிறார்கள்.

இரவு நேர ஊரடங்கு நீக்கப்படும் வரை, இரவு நேரத்திலும் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் நிறுத்தப்படும் வரை, அவை குறித்து உத்தியோக பூர்வ தடை வரும் வரை குடாநாட்டில் இரவு அச்சம் தொடரவே செய்யும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள்ளூர் இரவுக் கொள்ளையர் மெது மெதுவாகத் தமது தொழிலை ஆரம்பித்துள்ளது மேலும் ஆபத்தானதாகும்.

இடம்பெயர்வின் பின்னர் மீளக் குடியேறாதவர்களின் வீடுகளில் உள்ள உடைமைகளைத் திட்டமிட்டுத் திருடும் உள்ளூர்க் கோஷ்டிகள் ஊர்தோறும் கொட்டம் அடித்தது குறித்து ஏற்கனவே இப்பத்தியில் எழுதியிருந்தோம்.

அடுத்தவன் அரும்பாடுபட்டுத் தேடியவற்றை மனக் கூச்சமின்றி, சமூக உணர்வு சிறிதுமின்றி அபகரிக்கும் கயமைத் தனம் எங்களது சமூக விழுமியங்கள் எந்தளவுக்குத் தேய்ந்து போய் விட்டன என்பதையே வெளிப்படுத்துகின்றன.

அடுத்தவன் பொருளைத் தனது பொருள் போலப் பாதுகாத்துக் கொடுக்கும் நற்குணம் மாறி, அவன் இல்லாத வேளை களவாடும் சிறுமைத்தனம் எமது சமூகம் தானாகவே சீரழிந்து போவதற்கான நாசகார அறிகுறியே.

அதற்கும் மேலதிகமாக மக்களது வீடுகளில் இரவுக் கொள்ளைகள் தலைகாட்டுவது, பல வகைகளாலும் பாதிக்கப்பட்டு நலிந்து போயுள்ள குடாநாட்டு மக்களின் இரத்த அழுத்தத்தை மேலும் உயர்த்தப்போகிறது

கல்வயல் கொள்ளை முயற்சி போன்ற இரவுச் சம்பவங்கள் முளையிலேயே கிள்ளப்படா விட்டால் பயங்கரமான நிலை உருவாகும். பொய்த் துப்பாக்கியுடன் கொள்ளையிட வந்து வீட்டுக்காரரை தாக்கி காயப்படுத்தும் அளவுக்கு அடுத்தவன் பொருள் மேல் ஆசைப்படும் கீழ்மைத் தனம் சமூகத்தில் புரையோடிக் கிடக்கிறது,

இது சமூகத்தில் காடைத் தனம் மலிவதற்கு வித்திடும். இவ்விடயத்தில் சட்டம் ஒழுங்கை அமுலாக்கும் அரச இயந்திரம் பெரிதாக எதுவும் செய்துவிட முடியாது.

இத்தகைய சமூகவிரோதச் செயல்களில் இளையோர் ஈடுபடாமல் தடுப்பதில் மூத்தோரே கவனம் செலுத்த வேண்டும். இந்தப் போக்கு சமூக நாசத்தை விளைவிக்கும் என்பதனை அவர்களுக்கு உணர்த்தி வழிநடத்துவது மக்கள் பக்கத்தைச் சார்ந்ததே.

# தேசிய மனித உரிமை ஆணைக்குழு செயற்படுவதில் தாமதம் நீடிக்கிறது!

## உறுப்பினர்கள் இன்னும் நியமனம் இல்லை

தேசிய மனித உரிமை ஆணைக்குழு அமைக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போதிலும் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் அது இன்னமும் செயற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவுக்கு 2 சிங்களவர்களும், ஒரு தமிழரும், ஒரு முஸ்லீமும், ஒரு பறங்கியருமாக மொத்தம் 5 உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஆனால் இன்னும் உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை.

இந்த ஆணைக்குழு இயங்க ஆரம்பித்ததும் ஜான்ஸ் தலைமையிலான மனித உரிமைகள் செயலணிக் குழு கலைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

# மக்களை பாவ இருளிலிருந்து மீட்க இயேசு கல்லறையில் உயிர்த்தார்

இன்று தவக்காலத்தின் நான்காவது ஞாயிறு. திருமுழுக்கு வழியாக பாவ இருளில் இருந்து கிறிஸ்து என்னும் ஒளிக்கு வந்துள்ள நாம் அந்த ஒளியைப் பின் செல்லும் போது முடிவில்லாத வாழ்வைக் கொண்டுள்ளோம் என்பது இன்றைய கருப்பொருளாகும்.

தலைவர் சாமுவேல் காலத்தில் நடந்த சம்பவம் இது சவுல் அரசர் இஸ்ராயேலரின் அரசராக இருந்தார். அவரின் அரசாட்சியின் பொருட்டு ஆண்டவர் சவுலை இஸ்ராயேலரின் அரசராக்கியதிற்கு மனம் வருந்தி சாமுவேலிடம் பெத்தலகேமைச் சார்ந்த ஈசாயின் புதல்வர் ஒருவரை அரசராக்கும் படி பணித்தார். சாமுவேல் ஈசாயுவின் ஏழு புதல்வர்களைப் பார்வையிட்ட பின்பும் யாரையும் தெரிந்து கொள்ளவில்லை. பின் ஈசாயுவின் ஆடு மேய்க்கும் சிறிய மகனை அழைப்பித்து அவன் சிவந்த மேனியும் ஒளிரும் கண்களும் கொண்டு அழகிய தோற்றமுடையவனாய் இருப்பதைக்கண்டு, ஆண்டவர் கட்டளைப்படி அவனை அபிசேகம் செய்தார். அவரே தாவீது அரசர். அன்று முதல் ஆண்டவரின் ஆவி தாவீது மேல் நிறைவாக இருந்தது (1 சாமு. 16:1, 6-7-10-13)

இயேசு செய்த அருங்குறிகளில் இதுவும் ஒன்று. இயேசு ஒரு முறை கோயிலில் இருந்து வெளியே போய்க்கொண்டிருக்கும் போது பிறவியிலே பார்வை அற்ற ஒருவனைக் கண்டார்; உடனே சீடர்கள் இயேசுவிடம் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டனர். இவர் பார்வை அற்றவராகப் பிறந்தது இவர் செய்த பாவமா, இவர் பெற்றோர் செய்த பாவமா? இதுவே சீடர்களின் கேள்வி.

> **தவக்காலச் சிந்தனை**
> **(4 ஆவது ஞாயிறு)**

இரண்டுமல்ல. கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும் பொருட்டே இப்படிப் பிறந்தார் என்று கூறி அவர் கண்களில் சேற்றைப் பூசி சிலோலாம் குளத்தில் கழுவச் சொன்னார். கழுவும் போது அவர் பார்வை பெற்றார். றார். ஒருபுறம் அவர் பார்வை பெற்று விசுவாச ஒளியைப் பெற மறுபுறம் யூதர்கள் இயேசு ஓய்வு நாளில் இப்புதுமையைச் செய்தார் என்று அவரில் குற்றம் கண்டு பிடித்து இயேசுவின் விசுவாச ஒளியில் இருந்து தம்மை மூடிக் கொள்கிறார்கள் (அரு 9: 1-41.)

தாவீது அரசராக அபிசேகம் செய்யப்பட்டதைப் போன்று நாமும் திருமுழுக்கில் கிறிஸ்தவராக அபிசேகம் செய்யப்பட்டுள்ளோம். இந்த அபிசேகம் பணிபுரியத்தரப்படும் அழைப்பாகும்.

பிறவியிலே பார்வை அற்ற ஒருவர் பார்வை பெறுவது பிறவியிலேயே பாவ இருளைக் கொண்டிருக்கும் நாம் திருமுழுக்கில் கிறிஸ்து என்னும் விசுவாச ஒளியைப் பெற்று ஒளி பெறுவதைக் குறிக்கிறது.

இங்கு ஒளிபற்றிய விவிலியக்கருத்து மையப் படுத்தப்படுகிறது, இஸ்ராயேல் மக்கள் நெருப்பு தூண்வழி காட்ட தம் விடுதலைப் பயணத்தை தொடர்ந்தார்கள். இருண்ட கல்லறையில் இருந்து இயேசு ஒளியாக உயிர்த்தார். உலகின் மக்களை பாவ இருளில் இருந்து மீட்டு தம் ஒளியின் வழியில் சமாதானம், மீட்பு நோக்கி அழைத்துச் செல்லவே அவர் உயிர்த்தார்.

ஒளியின் மக்களாய் வாழுங்கள். ஏனெனில் ஒளியே எல்லா நன்மையையும் நீதியையும் உண்மையையும் விளைவிக்கிறது (எபே. 5 : 8 — 14) என்பதற்கொப்ப, ஒளியின் வாழ்வு வாழ்வோம், மற்றவரையும் வாழ அழைப்போம். எம் மண்ணின் இருளகன்று ஒளி வீசட்டும்.

—அருட்திரு.
ரூபன் மரியாம்பிள்ளை

## விபத்துக்களில் மூவர் காயம்

இருவேறு இடங்களில் நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் காயமடைந்த மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று உரும்பிராய் பிரதான வீதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் உரும்பிராயை சேர்ந்த மாரிமுத்து சண்முகநாதன் (வயது 48) என்பவர் காயமடைந்தார்.

சுயநினைவிழந்த நிலையில் காணப்படும்இவர்,சைக்கிளில் புறப்பட்டு சென்றதாகவும்—

வீதியில் விபத்துக்குள்ளாகி மயக்க நிலையில் இருந்ததாகவும் —

எதனுடன் விபத்துக்குள்ளானார் எனத் தெரியவரவில்லை எனவும் — அவரது உறவினர் ஒருவரால் தெரிவிக்கப்பட்டது. அவரது தலையில் காயம் காணப்பட்டது.

நேற்று முன்தினம் சாவகச்சேரி பிரதான வீதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் உரும்பிராயைச் சேர்ந்த செல்லையா சீவரத்தினம் (வயது 53) அவரது மகள் சீவரத்தினம்சுபோதினி (வயது 14) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். சீவரத்தினம் சுயநினைவிழந்த நிலையிலேயே உள்ளார்.

தகப்பனும் இரு பிள்ளைகளும் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வேளை மாடு ஒன்று குறுக்கே வந்து மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது,

ஒரு மகள் காயமெதுவுமின்றித் தப்பித்துக் கொண்டார்.

> **நாளை**
>
> **மாசி 27**
>
> **திங்கட்கிழமை**
>
> **திதி:** துதியை பின்இரவு 3-26 வரை.
>
> **நட்சத்திரம்:** உத்தரட்டாதி முன்இரவு 8.44 வரை.
>
> **சுபநேரம்:** 12.24-1.54
>
> **ராகுகாலம்:** 7.54-9.24
>
> (பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# தள்ளாத வயதிலும் தளராது பணிசெய்த மூதறிஞர் சபா. ஆனந்தர்

ஒளிவளர் விளக்காய், ஒப்பிலா அறிஞராய், அகவையில் மூத்தோனாய் இணுவையூரை அலங்கரித்த ஆனந்தர் ஐயா அமைதி கொண்டு ஆண்டு ஒன்று நிறைவாகிறது. கல்வியில் வல்லோனாய் நல்லாசிரியனாய், அதிபராய், சிறந்த பேச்சாளனாய், தொண்டனாய் வாழ்ந்த ஆனந்தர் ஐயாவின் பெருமைகள் சொல்லி முடிக்கக் கூடியனவல்ல.

1910 இல் இணுவையம்பதியில் பிறந்து, யாழ். இந்துக் கல்லூரியில் கற்று, பின் தமது உயர்கல்வியை சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தார். பண்டிதர் பரீட்சையிலும் லண்டன் கலை மானிப் பரீட்சையிலும் சிறப்புச் சித்தி பெற்ற சபா. ஆனந்தர் அவர்கள் இளம் வயது முதல் சிறந்த பேச்சாளராக அக்காலத்து இலக்கிய மேடைகளில் தன்னாற்றலை வெளிக்காட்டினார். 1932 முதல் ஆசிரியப் பணியில் தன்னை அர்ப்பணித்தவர். படிப்படியாக உயர்ந்து புகழ் பூத்த அதிபராக நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, நயினாதீவு மகாவித்தியாலயம் போன்ற கல்லூரிகளில் உயர் பணியாற்றி 1970இல் இளைப்பாறினார்.

“யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்னும் நல்லருள் வார்த்தைக்கு அமையப் பண்புடைய அமரர் அவர்கள், பலரைக் கல்விக் கடலில் நனைத்து மேன்மையுறச் செய்தவர். சேந்தனார் இறைவனை ஒளிவளர் விளக்கே என உயர் பொருளில் சொல்வது போல, ஆனந்தரை அறிந்தவர்கள் அவர் பல ஏழை மாணாக்கரின் வாழ்வுக்கு வழிகாட்டிய ஒளியெனப் போற்றுவர். தகைமையாளன் கற்ற பின் நிற்கும் தகவுக்கு ஏற்ப திசை தெரியாதிருந்த ஏழை

> **நீத்தார் நயப்புரை**

மாணாக்கருக்கு கலங்கரை விளக்காக நின்று உதவினார்.

தாம் கடமைஆற்றிய அத்தனை ஊர்களிலும் அவரது இல்லம் முற்காலக் குருகுல வாசம் போல விளங்கிய சிறப்பினை பலரும் போற்றுகிறார்கள். வடமாநிலக் கல்வி அதிபதியாக விளங்கிய புகழ் பூத்த பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் முதல் இன்றைய பல அறிஞர்கள் இவரது பாசறைக்குள் வளர்க்கப்பட்டு பரிணமித்தவர்கள்.

கல்விச் சேவையோடு ஆன் [illegible] கத்துறைகளிலும் ஆனந்தர் ஐயாவுக்கு உறவு மிக நெருக்கமாக இருந்தது. ஆதலால் அக்காலத்து முத்தமிழ் மேடைகளில்இவர் முதன்மை பெற்றார்.

“உவப்பத்தலைக் கூடி
உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர்
தொழில்”

என்ற வள்ளுவரது வாக்கிற்கு அமைய அவரது உரைகள் இருந்தன. இனி இவரது உரையினை எப்போது கேட்கலாம் என்ற மன ஆதங்கத்தை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு நகைச் சுவையோடு கூடிய நல்லுரைகளாக அவரது உரைகள் சிறப்புப் பெற்றன. ஆங்கிலத்திலும் வடமொழியாற்றலிலும் மிகுந்த புலமை கொண்ட ஆற்றலாளனாக விளங்கிய இவர் ஷேக்ஸ்பியர் போன்ற மேலைத்தேய அறிஞர்களது நூல்களையும், கீழைத்தேய தத்துவ நூல்களையும் ஐயந்திரிபறக் கற்று அழகு தமிழில் எடுத்துரைத்தார். மேலைத்தேய அறிஞர்களது கருத்துக்களை கற்றுத் தெளிந்து அவற்றிலுள்ள நயங்களை சபையிலே மும்மொழி அறிவோடு பேசும் போது அவையிலுள்ள மக்கள் மெய்மறந்து இரசிப்பதை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்கண்ட இளஞ்சந்ததியினர் இப்பழுத்த அறிஞரை விதந்து போற்றுவதை நாம் கண்டு அனுபவித்தோம்.

இத்தகைய மேதாவியின் இழப்பு, இணுவிலுக்கு மட்டுமல்ல ஈழநாட்டுக்கே பேரிழப்பாகும். தள்ளாடும் வயதிலும் தளராமல் பணி செய்த மூதறிஞர் ஆனந்தர் அவர்களை இரண்டு ஆண்டுகளுக்கு முன் இணுவிலில் நடந்த திருமுறைப் பெருவிழாவிலே பேரறிஞர் விருது வழங்கி இணுவையின் முதல்வர் என பட்டாபிடேக விழாப் போல பெருவிழாச் செய்து கௌரவித்தார்கள்.

சென்ற வருடத்தில் ஊரிழந்து உறவிழந்து உறுதுணைகள் பல இழந்து இடம் பெயர்ந்து அல்லல நிறைந்து இருந்த வேளை ஆனந்தர் ஐயா தன் மாணவன் இல்லத்தில் சாவகச்சேரியில் அமரத்துவம் பெற்றார். அவரது இறுதி வைபவம் தென்மராட்சியில் சிறப்புற்று நடைபெற்றது. நல்லன செய்த ஆத்மா பரமாத்ம நிலை பெற்று என்றும் வாழும் என்பது உண்மை.

— ஆறு. திருமுருகன்

## இல்ல விளையாட்டுப் போட்டி

வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கள் காலை 10.00 மணியளவில் அதிபர் து. சந்தோசம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட இணைப்புக் ....

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். தமது உரையில் யாழ். குடாநாட்டின் பிரச்சினைகள் குறித்து அவர் பொதுவாக விளக்கினார். தொடர்ந்து டக்ளஸ் தேவானந்த உரையாற்றினார். அவர் கூறியதாவது:-

யாழ். தேர்தல் மாவட்ட இணைப்புக் குழுவின் இக்கூட்டத்தை போர் நலிவுகளினால் துன்புற்றிருக்கும் யாழ். மக்களின் விடிவுக்கான—வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த— ஒரு கூட்டமாக நாம் கருதலாம்.

இத்தகைய இணைப்புக் குழுவை செயற்படுத்தி அதன் மூலம் எமது குடாநாட்டு மக்களின் துன்பத்தை போக்குவதற்கு முன்முயற்சி எடுத்து ஒத்துழைப்புத் தந்த ஜனாதிபதிக்கு எனது நன்றிகள்.

சரியான வழிகாட்டலை மேற்கொள்ளக்கூடிய — தூரதிருஷ்டியுள்ள — தலைமைத்துவம் இன்றி எமது சமூகம் தத்தளித்துக் கொண்டிருந்த போது அந்தச் சவாலை ஏற்று செயற்பட நாம் முன்வந்திருக்கின்றோம்.

நான் அரசியல் பேச இங்கு வரவில்லை. ஆனால் யதார்த்த நிலை என்னவென்பதைத்தான் குறிப்பிட விரும்புகின்றேன்.

எமக்கென தெளிவான வழி ஒன்றை நாம் வரையறை செய்து கொள்வது அவசியம்.

எமது புண்ணுக்கு நாம் தான் சிகிச்சை செய்து கொள்ளவேண்டும்; பத்தியம் உண்ணவேண்டும். அடுத்தவரல்ல.

### ஒத்துழைப்புத் தேவை

கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பவனுக்கு ஒரு மிதவைக் கட்டை கிடைப்பது போல இன்று துயரத்தில் வாடும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு இந்த இணைப்புக் குழு கிடைத்திருக்கின்றது. இந்தப் பற்றுக் கோட்டைப் பயன்படுத்தி எம்மை நாமே ஸ்திரப்படுத்திக் கொள்வோம். அதற்கு உங்கள் ஒத்துழைப்பு அவசியம்.

இனிமேல் மாதந்தோறும் அல்லது ஒன்று, ஒன்றரை மாதங்களுக்கு ஒரு தடவை இக்குழுவின் கூட்டங்கள் ஒழுங்காக நடைபெறும்.

யாழ். தேர்தல் மாவட்டத்தின் நிர்வாகக் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் இக்கூட்டங்கள் மூலம் நேர்சீர் செய்யப்பட்டு ஒழுங்கமைக்கப்படும்.

எமது மக்களின் நல்வாழ்வுக்கு, எதிர்கால சுபீட்சத்துக்கு ஐக்கிய இலங்கைக்குள் சமரச — சமாதான வாழ்வு கிட்டுவதற்கு — உரிய அரசியல் ஏற்பாடுகளைக் கோரியே நாம் செயலாற்றி வருகின்றோம்.

அரசு முன்வைத்திருக்கின்ற தீர்வுத் திட்டம் இதற்கு ஒரு சிறப்பான ஆரம்பம். ஆனால் அது மேலும் செழுமைப்படுத்தப்படவேண்டும்.

சுயலாபம் கருதி அரசியல் வழிநடத்தலில் ஈடுபட்ட தலைவர்களாலும் அவர்களின் பிழையான போக்குகளாலும் நாம் பல சந்தர்ப்பங்களை இழந்திருக்கின்றோம். அந்தப் பிழைகளின் பாதிப்பை நாம் இப்போது அனுபவிக்கின்றோம். அவற்றிலிருந்து கிடைத்த பாடங்களை அவதானித்து இனிமேலாவது சரியாகச் செயற்படுவோம்.

யாருக்கும் போட்டியாக அரசியல் நடத்தவோ அல்லது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவோ நாம் இங்கு வரவில்லை.

உங்கள் ஒத்துழைப்பு ஆலோசனை, இணக்கப்பாடு ஆகியவற்றின் உதவியோடு சரியான வழிநடத்துதலில் நாம் ஈடுபடுவோம்.

எமது பார்வையில் — செயற்பாடுகளில் —நடவடிக்கைகளில் குறை இருந்தால் சுட்டிக் காட்டுங்கள் திருத்திக் கொள்கிறோம். பழிவாங்கும் அல்லது துன்புறுத்தும் அல்லது அவமதிக்கும் பண்பில் நாம் நடந்து கொள்ள மாட்டோம். அது தான் எமது அணுகுமுறை.

எனவே எந்த அச்சமுமின்றித் தவறுகளைத் திருத்திக் கொள்ள நீங்கள் எங்களை அணுகலாம்.

எமது உரிமைகளை நாம் பெறுவதாயின் நாம் வெளிப்படையாகப் பேச முன்வர வேண்டும். ஒவ்வொருவருக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரம் உண்டு. எமக்கு நாமே பூட்டுப் போட்டு — எம்மை நாமே அடிமையாக்கி வைத்துக் கொண்டு — உரிமை பற்றிப் பேசுவதில் என்ன பயன்?

பேசாமல் நாம் மௌனம் சாதித்ததே இன்றைய எமது அடிமை நிலைக்குக் காரணம்.

எனவே மக்களே! அதிகாரிகளே மனம் திறந்து பேசுங்கள்! மனதில் பட்டதை அப்பட்டமாகக் கூறுங்கள். உங்கள் கருத்துக்கள் வீதிக்கு வரட்டும்.

'உஷ்' அருகில் உளவாளி இருப்பான் கவனம்' — என்று கூறிக் கூறியே உங்கள் வாயை அடைத்து விட்டார்கள். அந்த வாய்ப் பூட்டை மடைத்து, இன்று சுதந்திரமாக கருத்துக் கூற முன் வாருங்கள். எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி செய்யும் — வாய்ப்பாக அமைந்திருக்கும் — இக் கூட்டத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள் — என்றார்.

டக்ளஸ் தேவானந்தாவின் உரையை அடுத்து யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் புனர்வாழ்வு நிவாரண வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் ஆரம்பமானது,

நேற்று மாலை வரை நடைபெற்ற இக்கலந்துரையாடல் இன்று தொடர்ந்தும் நடைபெறும்.

போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், நீர் வழங்கல், உணவு விநியோகம், கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயம், சந்தைப்படுத்தல், நீர்ப்பாசனமும் உவர் நீர்த் தடுப்பும், கால்நடை வேளாண்மை, மின்சாரம், சனசமூக நிலையங்கள், பொது நூலகங்கள், சந்தைகள், விளையாட்டும், பொழுது போக்குதலும், விடுதிகளும் விருந்தினர் இல்லங்களும், சமயத் தொழுகைத் தலங்கள், சமூக சேவைகள், தொலைத் தொடர்புகள், தபாற் சேவைகள், வீதிகள், வீடமைப்பு, வங்கிகள், வேலை வாய்ப்பும் தொழிற் பயிற்சியும், இடம் பெயர்ந்தோரினதும், அகதிகளினதும் மீளக் குடியமர்வு, வறியோருக்கான நிவாரணமும் 'சமுர்த்தியும்', பனைவள அபிவிருத்தி, மீன்பிடி, துறைமுகங்களும் இறங்கு துறைகளும், சூழல் பாதுகாப்பு ஆகிய தலைப்புகளில் விரிவாக விடயங்கள் தொடர்ந்து ஆராயப்படுகின்றன

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை, காங்கேசன்துறை சிமெந்து ஆலை போன்றவை உட்பட புனர்நிர்மாண, அபிவிருத்தித் திட்டங்கள், மாவட்ட இணைப்புக் குழுவின் உப குழுவினது நடவடிக்கைகள் ஆகியவையும் இக் கலந்துரையாடலில் ஆராயப்படும். (உ)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வைத்திய கலாநிதி

## க. இராமசுவாமி

மறைவு:- 02 - 02 - 1997

02 - 02 - 1997 இல் காலமான திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த வைத்திய கலாநிதி க. இராமசுவாமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04 - 03 - 1997 இல் கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினா நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள்.

(9368)



# நியூ லலிதா நகை மாடம்

இல: 170, கஸ்தூரியார் வீதி

அன்பார்ந்த வாடிக்கையாளர்க்கு

## முக்கிய அறிவித்தல்

இலக்கம் 74/1, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த நியூ லலிதா ஸ்தாபனம். புதிய இல: 170 கஸ்தூரியார் வீதியில் இயங்கிவருகிறது. இலககம் 74/1 இல் தற்போது இயங்கும் ஸ்தாபனத்துக்கும், எமக்கும் எவ்விதமான தொடர்புகளும் இல்லை என எமது வாடிக்கையாளருக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

நியூ லலிதா நகை மாடம்

இல. 170, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (9364)


## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

சுதந்திரத் தேர்தல் ஒருங்கிணைப்பு மக்கள் குழுஇவர்களை இலங்கைக்கு அழைத்திருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக கவலை தெரிவித்து கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது,

உள்ளூராட்சித் தேர்தலின் போது தேர்தலைக் கண்காணிக்க வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்களை அனுமதிப்பதில்லை என்ற முடிவுக்கு அமையவே இந்த மூவருக்கும் அனுமதி வழங்க இலங்கை அரசு மறுத்ததாகத் தெரியவருகின்றது.

## கஜபாகு...,

(முதலாம் பக்கத் தொடர்)

மாதம் 17 ஆம் திகதி அமைக்கப்பட்டு, அந்த றெஜிமென்டில் உள்ள படையினருக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது.

''வவுணதீவு முகாமை நோக்கி அலைஅலையாக விடுதலைப் புலிகள் வந்து தாக்குதல் நடத்தினார்கள்'' என்று இம்முகாம் தாக்குதலில் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் படையினர் தெரிவித்தனர்.

# வவுணதீவுத் தாக்குதலின் போது புளொட் உறுப்பினர்களும் காயம்

கொழும்பு, மார்ச் 9

வவுணதீவு முகாம் தாக்குதலின் போது இரு புளொட் அமைப்பு உறுப்பினர்களும் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுகின்றனர் என்று அந்த அமைப்பு பிரதிநிதிகள் கொழும்பில் தெரிவித்தனர்.

இம் முகாம் தாக்குதலின் போது தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த 50 பேர் முகாமில் இருந்தார்கள் என்றும்—

அவர்கள் நிலை குறித்து தகவல் கிடைக்கவில்லை என்றும் — முன்னர் தகவல்கள் கொழும்பில் வெளியாகியிருந்தன.

முகாம் தாக்கப்பட்ட சமயம் புளொட் அமைப்பைச் சேர்ந்த 12 பேர் அந்த முகாமில் இருந்தனர் என்றும் —

அவர்களில் இருவர் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும்—புளொட் அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (இ-3-150)

## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்)

மூல காரணங்கள், அதனால் உண்டான விளைவுகள், பாதிப்புகள், இப்போதைய தடங்கல் நிலை என்பன குறித்தும் —

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சாத்தியமான வழிமுறைகள், அவற்றுக்கான சூழ்நிலையை உருவாக்கும் உத்திகள் என்பன குறித்தும் அவர் —இப்போது ஆராய்ந்து வருவதாக அறியவந்துள்ளது.

கொழும்பில் உள்ள ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரியான ஒவ்தாப்பும், வென்ட்ருளுடன் சேர்ந்து ஆய்வு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து வெளியாகும் தமிழ் வார இதழ் ஒன்று இது குறித்து வெளியிட்டுள்ள செய்தியில் பின்வரும் சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஐ. நா. மேற்கொள்ளும் ஆய்வு, இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஐ நா. தலையிடுமா? அல்லது மூன்றாம் தரப்பு ஒன்றின் தலையீட்டுக்கு வழிசெய்யுமா என்ற கேள்வியைக் கொழும்பில் எழுப்பியுள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாக ஐ. நா. உயர் அதிகாரி ஆய்வு மேற்கொள்வதை அரசு தரப்பு பெரிதாக விரும்புவதாகத் தெரியவில்லை.

இவரது வருகைக்கும் புலிகளின் செயற்பாட்டுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமா என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (அ-3-150)

## மற்றும்..

(முதலாம் பக்கத் தொடர்)

ருந்தது

விமானத் தளத்தை அண்மித்ததும் தரையிறங்க வசதியாக விமானத்தைத் தாழப் பதித்தபோது அதன் ஒருபக்க இயந்திரம் பழுதடைந்தது என்றும் —

மிக அவசரமாக விமானத்தை ஒடு தளத்தை நோக்கி விரைந்து கொண்டு சென்றசமயம் அடுத்த இயந்திரமும் செயலிழந்து போனதாகவும் சொல்லப்படுகிறது.

எனினும் விமானத்தை பலாலி விமானத்தள ஓடு பாதைக்கு வெளியே (அது ஆரம்பிக்கும் இடத்துக்குச் சமீபமாக) வெற்றுத் தரையில் விமானி சாதுரியமாகத் தரையிறக்கி விட்டார் என்று அறியவந்தது.

இதனால் அங்கு இடம் பெறவிருந்த மற்றொரு விபத்து தவிர்க்கப்பட்டது. அதிலிருந்த படையினர் மற்றும் அதிகாரிகள் அதிர்ஷ்டவசமாகத் தப்பினர்.

இந்த விமானத்தில் பயணம் செய்தவர்களில் நேற்று யாழ். செயலகத்தில் நடந்த யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்த சிவில் உயர் அதிகாரிகள் இருவரும் அடங்குவர்.

கடைசியாக இரத்மலானையில் இடம்பெற்ற 'அன்ரனோவ் விமான விபத்து குறித்து அந்த விமானத்தின் ரஷ்ய விமானி மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது

'அன்ரனோவ்' ரக விமானங்கள் ஏற்கனவே விபத்துக்குள்ளானது தொடர்பாக உக்ரைன் நாட்டு விமானக் கம்பனியின் அறிக்கை கிடைக்கும் வரை ''அன்ரனோவ்'' விமானங்கள் சேவையில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகி இருந்ததும் தெரிந்ததே. (ஐ-உ)

# விகாரையில் ஆயுதங்கள்: பிக்கு கைது

கொழும்பு, மார்ச் 9

பாணந்துறைப் பகுதியில் உள்ள விகாரை ஒன்றில் ஒரு தொகுதி ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் பாணந்துறைப் பொலீஸார் கண்டுபிடித்தனர்.

விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ள பிக்கு ஒருவர் மொறககெனை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# காலியில் 17 தமிழர்கள் கைது

கொழும்பு, மார்ச் 9

காலி நகரில் சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாகக் கூறப்படும் 17 தமிழ் இளைஞர்கள் கடந்த வியாழக்கிழமை இரவு காலி பொலீஸாரல் கைது செய்யப்பட்டனர்.

இந்த இளைஞர்கள் கபுரல்ல மற்றும் கந்துகச பகுதிகளில் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## வவுணதீவு...

(முதலாம் பக்கத் தொடர்)

கூறுவதாக பாரிஸில் புலிகளின் பேச்சாளர் அன்ரன் ராஜா ரோய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்திருந்தார்.

தற்பொழுது இந்த தாக்குதலில் 84 பேர் களப்பலியானதாக ஈழநாதம் பத்திரிகையில் வெளியான புலிகளின் அறிக்கையை ஆதாரம் காட்டி ஏ எவ். பி செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது

இந்த 84 பேரில் மட்டக்களப்பு—அம்பாறை மாவட்ட மகளிர் அணி சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் மதனா, வினோதன் படையணித் தளபதி லெப்டினன்ட் கேணல் பலேந்திரா மட்டக்களப்பு—அம்பாறை மாவட்ட நிதிப் பொறுப்பாளர் மேஜர் மணிமாறன் ஆகியோரும் அடங்கி இருப்பதாக புலிகளின் அறிக்கை தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

அதேதினம் இடம்பெற்ற திருகோணமலை மாவட்டம் சீனக்குடா இராணுவத்தளம் மீதான தாக்குதலில் மூன்று கரும்புலிகள் சாவடைந்ததாகவும் அது தெரிவித்தது.

கரும்புலி மேஜர் சிற்றம்பலம், கரும்புலி கப்டன் நிவேதன் கரும்புலி கப்டன் விஜயரூபன் ஆகியோரே இந்த மூவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org